பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**12 09 2026** **SATURDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, மலேசியா மற்றும் எத்தியோப்பியா நாடுகளின் பிரதமர்களுடன் இன்று புதுதில்லியில் பேச்சு நடத்தினார்.

2. நாட்டின் வளர்ச்சியில் தொழிலாளர்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

3. பிரதமரின் விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், இதுவரை 24 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. வெளிப்படைத் தன்மையுடன் கூடிய தேர்தல் நடைமுறைகளை இந்தியா கொண்டுள்ளதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு. **Gyanesh Kumar** கூறியுள்ளார்.

5. உலக பாரா துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Bhakti Sharma** வெண்கலப்பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மலேசிய பிரதமர் திரு. அன்வர் இப்ரஹிமுடன் இன்று புதுதில்லியில் பேச்சு நடத்தினார்.

இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து இந்த பேச்சுக்களின் போது விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்க இந்தியா வந்துள்ள தலைவர்களுடன் பிரதமர் மேற்கொண்டு வரும் பேச்சுவார்த்தையின் ஒரு பகுதியாக இது நடைபெற்றதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

இதேபோல், எத்தியோப்பிய பிரதமர் திரு. **Abiy Ahmed Ali**-யுடனும் பிரதமர் பேச்சு நடத்தினார்.

இதற்கிடையே, இரண்டு நாள் பிரிக்ஸ் உச்சிமாநாடு, இன்று பிற்பகல் புதுதில்லியில் தொடங்குகிறது.

இதனை ஒட்டி, விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**15** ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவலர்களும், **200** கம்பெனி துணை ராணுவ படையினரும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

உச்சிமாநாடு நடைபெறும் பாரத் மண்டபம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் **500**-க்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இன்று தொடங்கும் இந்த மாநாடு நாளை வரை நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

மின்துறையில் மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக அதன் விநியோக கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மின்விநியோக நிறுவனங்கள், கடந்த நிதியாண்டில் 2 ஆயிரத்து 701 கோடி ரூபாய் அளவிற்கு லாபம் ஈட்டியுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன் காரணமாக, மின்விநியோக சேவைகள் மேம்பட்டுள்ளதாகவும், நுகர்வோர்களுக்கு இது பெரிதும் பயனளித்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு மின்விநியோக நிறுவனங்கள் 67 ஆயிரத்து 962 கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டத்தில் இயங்கி வந்ததாகவும், தற்போது அந்த நிலை மாறி சாதனை அளவாக இந்த லாபத்தை ஈட்டியுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

நாட்டின் வளர்ச்சியில் தொழிலாளர்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

மும்பையில் தொடங்கிய கட்டுமான தொழிலாளர்களின் இரண்டுநாள் தேசிய மாநாட்டிற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தொழிலாளர் நலனுக்கு தேவையான நடவடிக்கைகளை மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தொழிலாளர் நலனுக்கான நிதியை மாநில அரசுகள் முழுமையாக செலவிட வேண்டும் என்றும் திரு. மன்சுக் மாண்டவியா வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

பிரதமரின் விவசாயிகளுக்கான ஓய்வூதிய திட்டத்தின் கீழ், இதுவரை 24 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த திட்டம் இன்று, 7வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளதை அடுத்து, மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை செயல்படுத்துவதில் ஹரியானா முதலிடத்தில் உள்ளது என்றும், இம்மாநிலத்தில் **5** லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**60** வயதுக்கு மேற்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மாதந்தோறும் குறைந்தது மூவாயிரம் ரூபாய் ஓய்வூதியம் இந்த திட்டத்தின் கீழ் வழங்கப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

உலக அளவில் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய தேர்தல் நடைமுறைகளை இந்தியா கொண்டுள்ளதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு. **Gyanesh Kumar** கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம், அஹமதாபாதில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடையே உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

ஒவ்வொரு கட்ட தேர்தல் நடைமுறைகளிலும் அரசியல் கட்சிகளின் பிரநிதிகள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் பங்கேற்க அனுமதிக்கப்படுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக, வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் திரு. **Gyanesh Kumar** தெரிவித்தார்.

முதுபெரும் தமிழறிஞர் பேராசிரியர் சாலமன் பாப்பையாவின் மறைவுக்கு குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பட்டிமன்ற மரபின் வழியாக தமிழ்மொழியின் செழுமையை எண்ணற்ற இல்லங்களுக்கு கொண்டு சென்றவர் சாலமன் பாப்பையா என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

தமிழ்மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டிற்காக அவர் ஆற்றிய பணி என்றென்றும் நினைவுகூரப்படும் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, சாலமன் பாப்பையாவின் இறுதிச்சடங்குகள் மதுரையில், அரசு மரியாதையுடன் இன்னும் சற்றுநேரத்தில் நடைபெறவுள்ளன.

<<<<<<>>>>>

தெலங்கானாவில் கல்வித்துறைக்கான நிதி ஒதுக்கீட்டினை 15 சதவீதம் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் இதனை தெரிவித்த அவர், கடந்த நிதியாண்டில் கல்வித்துறைக்கான நிதி ஒதுக்கீடு, அதற்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

கல்வித்துறையில் பெரிய அளவில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் திரு ரேவந்த் ரெட்டி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

ஜார்கண்டில் உள்ள ஆறு அரசு மருத்துவமனைகளில் புற்றுநோய் சிகிச்சைக்கான சிறப்பு மையங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

இந்த சிறப்பு மையங்களில் **Radiation** சிகிச்சை வசதி ஏற்படுத்தப்படும் என்று அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தனியார் பங்களிப்புடன் இந்த மையங்களை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

அஸ்ஸாமில் நேரிட்ட சாலை விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

**Sonitpur** மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் சென்று கொண்டிருந்த கார், லாரி மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>

ஜம்மு கஷ்மீரின் பல்வேறு பகுதிகளில் தேசிய புலனாய்வு அமைப்பினர் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

பாரமுல்லா மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் இந்த சோதனை நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தீவிரவாத செயல்கள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில் இந்த சோதனை நடைபெற்று வருவதாக அவர் மேலும் கூறுகிறார்.

<<<<<<>>>>>>

உத்தரப்பிரதேசத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

25 மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக உத்தரப்பிரதேச அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து 8 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிவாரண முகாம்களில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தங்கியுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

உலக பாரா துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Bhakti Sharma** வெண்கலப்பதக்கம் வென்றார்.

கொரியாவின் **Changwon**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் **10** மீட்டர் பிரிவில் அவர் இப்பதகதக்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை, ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

---------------

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா **5-1** என்ற கோல்கணக்கில், தென்கொரியாவை வென்றது.

சுப்ரியா **3** கோல் அடித்தார். **Madhu Sidar** மற்றும் **Sukhveer Kaur** தலா ஒரு கோல் அடித்தனர்.

---------------

வியட்நாம் ஓபன் பேட்மிண்டன் போட்டியில இந்தியாவின் **Isharani Baruah** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **21-10, 21-18** என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Rakshitha Sree**-ஐ வென்றார்.

--------------------

ஜப்பான் பாரா பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Pramod Bhagat** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **21-11, 21-16** என்ற செட்கணக்கில் ஜப்பானின் **Daisuke Fujihara**-வை வென்றார்.

இதர ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டங்களில் வெற்றிபெற்று **Umesh Vikram Kumar, Sukant Kadam** ஆகியோரும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் **Pramod Bhagat - Sukant Kadam** இணையும் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

---------------

உலக கோப்பை இறுதி வில்வித்தைப் போட்டி மெக்ஸிகோவின் **Saltillo**-வில் இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் **Dhiraj Bommadevera** இதில் பங்கேற்றுள்ளார்.

--------------

இந்தியா-ஏ - ஆஸ்திரேலியா-ஏ அணிகளுக்கு இடையேயான முதலாவது மகளிர் டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று சண்டிகரில் நடைபெறுகிறது.

---------------

**Bali-**யில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண்சிங் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **6-4, 7-6** என்ற செட்கணக்கில் இந்தியாவின் **Digvijay Pradap Singh-**ஐ வென்றார்.

**<<<<<<<END>>>>>>**